**28 மார்ச் 2023**

**அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்**

**அன்பின் ஐயா,**

**வெளிவாரியான நீதிமன்ற சேவைகளை பெறுவதற்கான முன்மொழிவுக்கான வேண்டுகோள்**

**குறிப்பு இலக்கம் HDFCB /AD/PRO/ RFP/S/ 2023/03/03**

வெளிவாரி நீதிமன்ற சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு HDFC வங்கி புகழ் பெற்ற நிறுவனங்களிடமிருந்து / தனிநபர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட முன்மொழிவுகளை அழைக்கிறது.

**பிரிவு – 1. முன்மொழிவுகள்**

(1) முன்மொழிவுகளில் உள்ளடங்குபவை

(அ) நீதிமன்ற கட்டளை சேவகரும் வெளியேற்று நிறைவேற்றுனருடன் தொடர்பினை ஏற்படுத்தி கடன்பட்டவர்களுக்கு அழைப்பாணைகள் விடுத்தலை துரிதப்படுத்தல்.

(ஆ) நீதிமன்ற உத்தியோகத்தர்களுடன் தொடர்பினை ஏற்படுத்தி தாமதமின்றி ஆவணங்களை தயார்படுத்தும் நடவடிக்கைகளை துரிதப்படுத்தல்.

(இ) கடன்பட்டவரின்(களின்) சரியான முகவரியினை அடையாளம் காணல்.

(ஈ) கடன்பட்டவர்களினதும் பிணையாளர்களினதும் சொத்துக்கள் தொடர்பான பட்டியலை விசாரித்து உறுதி செய்து கொள்ளல்.

(உ) வங்கி உத்தியோகத்தர்கள் மற்றும் நீதிமன்ற உத்தியோகத்தர்களுடனும் தொடர்பினை ஏற்படுத்தி ரிட் (WRIT) செயற்பாடுகளின் ஆவணப்படுத்தல் பகுதியினை துரிதப்படுத்தல்.

(ஊ) நிதித் குத்தகைக்கு உட்பட்ட வாகனங்களை பரிமுதல் செய்தல்.

(எ) வாடிக்கையாளர்களின் விருப்பத்துடன் நிதிக்குத்தகைக்கு உட்பட்ட வாகனத்தினை கையளித்தல்/ஒப்படைத்தல்.

**(2) விலைகள் மற்றும் கழிவுகள்**

(அ) விலை சமர்ப்பிக்கப்படும் பத்திரத்தில் விலை பற்றி முன்மொழியப்படும் பொழுது மொத்த விலை குறிக்கப்பட வேண்டும். போக்குவரத்து செலவு தனிப்பட்ட செலவு, (தேவையாயின்) உணவு மற்றும் தேனீர் அடங்களாக மேலே இலக்கம் (1) இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இடம்பெற வேண்டும்.

(ஆ) விற்பனையாளர்கள் இலங்கை ரூபாவில் மாத்திரம் குறிப்பிடல் வேண்டும்.

(இ) பொருத்தமான பெ.சேர் வரி மற்றும் ஏனைய வரிகள் தனித்தனியாக குறிப்பிடப்படல் வேண்டும்.

(ஈ) ஒப்பந்த காலத்தின் போது விலை கோருபவரின் செயற்பாடுகள் எந்த விதத்திலும் மாற்றம் அடையாமல் நிலையாக காணப்பட வேண்டும். விலை கோரலின் போது மாற்றத்திற்கு உட்படும் விலைகள் என்றவகையில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தால் இது பொறுப்பற்றதாக கருதி நிராகரிக்கப்படும்.

**3. முன்மொழிவுகளின் செல்லுபடியாகும். காலம்**

(அ) விலை கோரல் பத்திரம் சமர்ப்பிப்பதற்கான காலம் முடிவடைந்த தினத்தில் இருந்து ஒரு வருட காலம் வரை இந்த விலை கோரல் செல்லுபடியானதாக இருக்கும்.

**(4) முன்மொழிவுகளை சமர்ப்பித்தல் மற்றும் முன்மொழிவுகளை சமர்ப்பிப்பதற்கான கால எல்லை**

(அ) விற்பனையாளர் தனது முத்திரையிடப்பட்ட முன்மொழிவுகளை பதிவுத்தபால் மூலம் அல்லது HDFC வங்கியின் தரைமாடியில் தபால் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்வி கோரல் பெட்டியில்

இடலாம். முகவரி, த. பெ. இல. 2085, சேர் சித்தம்பலம் ஏ. காடினர் மாவத்தை, கொழும்பு 02. விற்பனையாளர் கடித உரையின் இடது பக்க மேல் மூளையில் ஒரு தனியான அடையாளத்தினை (கேள்வி கொரல் இலக்கம் அல்லது விபரங்களை) இட வேண்டும்.

முன்மொழிவுகள் முத்திரை இடப்படாது அல்லது வேண்டப்பட்ட விதத்தில் குறிப்பிடப்பட்டிருக்காவிட்டால், கேள்வி கோரல் பத்திரங்கள் / முன்மொழிவுப் பத்திரங்களின் முன்கூட்டிய திறப்பு அல்லது காணமல் போதல் தொடர்பான விடயங்களில் வங்கி பொறுப்புடையதாக இருக்காது.

(ஆ) முன்மொழிவுகள் செயலாளர் கேள்வி கோரல் சபை 11 த. பெ. இல. 2085, எச்.டீ.எப்.சீ வங்கி சேர். சித்தம்பலம் ஏ. காடினர் மாவத்தை. கொழும்பு 02. என்ற முகவரிக்கு ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும்.

(இ) வங்கி, மின்னஞ்சல் மூலம் அல்லது திறந்த தபால் உறையில் இடப்பட்ட முன்மொழிகள் எதனையும் பொறுப்பேற்காது அவை நிராகரிப்படும்

**(5) கால தாமதமான முன்மொழிவுகள்**

(அ) குறிப்பிட்ட திகதிக்கு பின்னர் காலதாமதமாக கிடைக்கும் எந்தவொரு முன்மொழிவும் வங்கியினால் நிராகரிக்கப்படும்.

**(6) முன்மொழிவுகளைத் திறத்தல்**

(மேலே 4ல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு) முன்மொழிவுகள் யாவும் த. பெ. இல. 2085, சேர். சித்தம்பலம் ஏ. காடினர் மாவத்தை. கொழும்பு 02. ஏன்ற முகவரியில் அமைந்துள்ள எச்.டீ.எப்.சீ வங்கியின் இரண்டாவது மாடியில் உள்ள நிறுவாகப்பிரிவில் பகிரங்கமாக திறக்கப்படும்.

(ஆ) ஏலதாரர்களின் பிரதிநிதி ஒருவர் கலந்து கொண்டு அவரது வருகையினை குறிக்கலாம்.

**(7) முன் மொழிவுகளின் மதிப்பீடு மற்றும் ஒப்பீடு**

(அ) முன்மொழிவுகளின் / விலை கோரல்களின் பரிசீலனை மதிப்பீடு மற்றும் ஒப்பீடுகளுக்கு உதவுவதற்காக, வங்கி அதன் விருப்பத்திற்கு ஏற்ப விற்பனையாளர்களிடமிருந்து அதன் விலை கோரல்கள் தொடர்பான விளக்கங்களை கோரலாம். அதேவேளை வங்கியினால் வேண்டப்பட்ட விதத்தில் ஏற்புடையதாக காணப்படாவிட்டால் அவை கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது.

(ஆ) வங்கியினால் விளக்கம் தொடர்பாக விடுக்கப்படும் வேண்டுகோள் மற்றும் அதற்கான பதில்கள் அனைத்தும் எழுத்து மூலமாக அமைதல் வேண்டும்.

(8). **முன்மொழிவுகள் / விலை கோரல்களின் மதிப்பீடு**

(அ) உரிய முறையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக தீர்மானிக்கப்படும் ஒவ்வொரு விலை கோரல் பத்திரமும் வங்கியினால் மதிப்பீடு செய்யப்படும்.

(ஆ) விலை கோரல் பத்திரங்களை வங்கி மதிப்பீடு செய்யும் போது பின்வரும் விடயங்களும் கவனத்தில் கொள்ளப்படும்.

i. அனுபவம்

ii. குறிப்பிடப்பட்டுள்ள விலை

iii. வழங்கப்படும் கழிவுகள் காரணமாக விலை செம்மையாக்கல்கள்.

**9. சமர்ப்பிக்கப்படும் விலைகோரல் / முன்மொழிவுகளில் எந்த ஒன்றினை அல்லது அனைத்தினையும் ஏற்றுக்கொள்ளவோ அல்லது நிராகரிக்கவோ வங்கிக்கு உரிமை காணப்படுகிறது.**

(அ) விலைகோரல் / முன்மொழிவுகளை ஏற்றுக்கொள்வதற்கு முன்னர் எந்த வேளையிலும் அதனை நிராகரிப்பதற்கான உரிமையினை வங்கி கொண்டுள்ளது இதன்படி இது தொடர்பில் வங்கி விற்பனையாளர்களுக்கு பொறுப்பு கூற வேண்டிய தேவை ஏற்படாது.

பிரிவு 2 – ஒப்பந்தம் வழங்கல்

**10. விலைகோரல் மனுக்களை /முன்மொழிவுகளை ஏற்றுக்கொள்ளல்**

வங்கியினால் வழங்கப்பட்ட ஆவணங்களுக்கு கவனிக்கத்தக்க வகையில் பதிலளிக்கப்பட்டுள்ள மிகச் சிறந்தது என தீர்மானிக்கப்படும் மதிப்பீடு செய்யப்பட்ட ஏலம் தொடர்பில் தொடர்புடைய விற்பனையாளரின் முன்மொழிவுகள் வங்கியினால் ஏற்றுக்கொள்ளப்படும்.

**11. ஏற்றுக்கொண்டதனை அறிவித்தல்**

முன்மொழிவுகள் / விலை கோரல் மனுக்களின் காலாவதியாகும் திகதிக்கு முன்னர் வங்கி வெற்றிகரமாக தெரிவு செய்யப்பட்ட விற்பனையாளருக்கு, அவரது முன்மொழிவுகள் / விலைகோரல் மனு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாக எழுத்து மூலம் அறிவிக்கும்.

**12. செலுத்தல்கள்**

(அ) சேவைகளை நிறைவு செய்து இறுதி விலைப்பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டு இரண்டு வாரங்களினுள் செலுத்தல்கள் மேற்கொள்ளப்படும்.

(ஆ) வங்கியின் சம்பந்தப்பட்ட பாவனை திணைக்களத்தின் அதிகாரி ஒருவரினால் இறுதி விலைப்பட்டியல் அத்தாட்சிப்படுத்தப்பட்டதன் பின்னர் கொடுப்பனவு விடுவிக்கப்படும்

**13. ஒப்பந்தம்**

ஒரு ஒப்பந்தம் / ஈடுபாட்டுக்கான கடிதம் ஒரு வருட காலத்திற்கு கையெழுத்திடப்பட வேண்டும்.

உங்கள் உண்மையுள்ள

எச். டீ. எப். சீ. வங்கி

**எஸ். அடசூரிய (கேள்விகோரல் சபை செயலாளர்)**

இணைப்பு – 1
FO/ADMIN/651(s)

**விலைகோரல் பத்திரம் (சேவைகளுக்கானது)**

**HDFCB/AD/PRO/RFP/S/2023/03/03**

**சேவை வழங்குனரின் தகவல்கள்**

கம்பனியின் பெயர் :----------------------------------------------------------------------------------------------

முகவரி :---------------------------------------------------------------------------------------------

தொடர்புகளுக்கு தொடர்பு இல. ------------------------------------------

மின்னஞ்சல் :--------------------------------------------------------------------------------------------

**அ. விலைகோரல் விபரங்கள் வெளிவாரி நீதிமன்ற சேவைகள்**

| | விபரம் | ஓவ்வொரு வழக்குக்குமான விலை குறிப்படல் | | பிரயாணச் செலவு 1 கி. மீட்டருக்கு | குறிப்புகள் |
|---|---|---|---|---|---|
| | | **கொழும்பினுள்** | **வெளியிடம்** | | |
| 1 | நீதிமன்ற கட்டளைச் சேவகர் வெளியேற்று நிறைவேற்றுனருடன் தொடர்பினை ஏற்படுத்தி கடன்பட்டவர் களுக்கு அழைப்பாணைகள் விடுத்தலை துரிதப்படுத்தல். | | | | |
| 2 | நீதிமன்ற உத்தியோகத்தர்களுடன் தொடர்பினை ஏற்படுத்தி தாமதமின்றி ஆவணங்களை தயார் செய்யும் நடவடிக்கை களை துரிதப்படுத்தல். | | | | |
| 3 | கடன்பட்டவரின்(களின்) சரியான முகவரியினை அடையாளம் காணல். | | | | |
| 4 | கடன்பட்டவர்களினதும் பிணையாளர்களினதும் சொத்துக்கள் தொடர்பான பட்டியலை விசாரித்து உறுதி செய்து கொள்ளல் | | | | |
| 5 | வங்கி உத்தியோகத்தர்கள் மற்றும் நீதிமன்ற உத்தியோகத்தர்களுடனும் தொடர்பினை ஏற்படுத்தி ரிட் (WRIT) செயற்பாடுகளின் ஆவணப்படுத்தல் பகுதியினை துரிதப்படுத்தல். | | | | |
| 6 | நிதித் குத்தகைக்கு உட்பட்ட வாகனங்களை பரிமுதல் செய்தல். | | | | |
| 7 | வாடிக்கையாளர்களின் விருப்பத்துடன் நிதிக்குத்தகைக்கு உட்பட்ட வாகனத்தினை கையளித்தல்/ஒப்படைத்தல். | | | | |
| 8 | **ஏனைய சேவைகள்** | | | | |

நான் / நாம் மேலே குறிப்பிட்ட விலை, விதி முறைகள் மற்றும் நிபந்தனைகளின்படி இந்த அழைப்புப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விலை கோரல் விதிமுறைகளுக்கு ஏற்ப மேற்படி சேவைகளை வழங்குவதற்கு உடன்படுவதாக இணக்கம் தெரிவித்து இத்தாள் கையொப்பமிடுகிறேன்/ றோம்.

பெயர் …………………                                        கையொப்பம் ……………..

இறப்பர் முத்திரை                                        திகதி ……………………..